

தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வாயிலாக தெரிவு செய்யப்பட்ட 25 இளநிலை உதவியாளர் மற்றும் 47 பணவசூலாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை குறு சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் திரு.அன்சுல் மிஸ்ரா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் வாரிய செயலாளர் நா.காளிதாஸ், தலைமை பொறியாளர்கள் வி.எஸ்.கிருஷ்ணசாமி, சு.லால் பகதூர், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



விருதுநகர் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாளை முன்னிட்டு ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை சார்பில் மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர் வீ.ப.ஜெயசீலன், தலைமையில், விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர். சீனிவாசன், சாத்தூர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.ரகுராமன் மற்றும் சிவகாசி மாநகராட்சி மேயர் சங்கீதா இன்பம் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்ற சமத்துவ நாள் விழா நிகழ்ச்சியில் அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் மற்றும் அமைச்சர் தங்கம்தென்னரசு ஆகியோர் 1155 பயனாளிகளுக்கு ரூ.5.07 கோடி மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

### நகராட்சி – பேரூராட்சிகளுடன் ஊராட்சிகளை இணைக்கும் பணி!

# முழுக்க, முழுக்க விவசாய நிலமாக இருந்தால் விலக்கிக் கொள்ளலாம்!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் கே.என்.நேரு அறிவிப்பு!

சென்னை, ஏப்.18- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**பி. தங்கமணி:** அமைச்சர் அவர்கள் பதில் சொல்கின்றபோது விவசாய பகுதியாக இருந்தால் நகராட்சிப் பகுதியோடு இணைக்க மாட்டோம் என்று சொல்லி இருக்கின்றார்கள். என்னுடைய தொகுதியில் இருக்கிற 18 ஊராட்சிகளுமே கிட்டத்தட்ட, 20 ஆயிரம் ஏக்கர் பாசன பகுதி. மேட்டூர் இடதுகரை வாய்க்கால் முழுக்க, முழுக்க என்னுடைய தொகுதியில்தான் இருக்கின்றது. அத்தகைய ஊராட்சிகளை எல்லாம் நகராட்சியோடு இணைக்க வேண்டுமென்று உத்தேசிக்கப்பட்டிருக்கின்றது. அப்படி அமைச்சர் அவர்கள் சொன்ன பதிலின் அடிப்படையில் அது விவசாய பூமியாக இருந்தால் அதனை கிராம ஊராட்சியாகவே இருப்பதற்கு அனுமதிக்குமாறு கேட்டு, அமர்கிறேன்.

**அமைச்சர் கே.என். நேரு:** குறிப்பாக ஒரு ஊராட்சியை ஏன் நகராட்சியோடு இணைக்கிறோம் என்று சொன்னால், அந்தப் பகுதியில் இந்த சாலை சகல வசதியோடு, பாதாள சாக்கடைத் திட்டம் இருக்கிறது, விளக்கு வசதிகள் இருக்கிறது, கழிப்பறை வசதி இருக்கிறது. அதுவே ஊராட்சி என்கிறபோது மிகப்பெரிய அளவிலே இருக்கிறபோது அவர்களால் இந்தளவுக்கு செய்ய முடியவில்லை. அதனால்தான் இந்தப் பகுதிகளோடு இணைத்தால் அருகில் இருக்கிற மக்களும் பயன் பெறுவார்கள் என்கிற வகையிலேதான் அந்தத் திட்டம் நிறைவேற்றப்பட்டது, ஒன்று.



இரண்டாவதாக ஒரு நகராட்சி அல்லது பேரூராட்சிப் பகுதியிலே அரசினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்கு இப்போது, விருத்தாசலத்திலே பேருந்து நிலையம் அமைப்பதற்கு இடம் இல்லை. திருச்செங் கோட்டிலே பேருந்து நிலையம் அமைப்பதற்கு இடம் இல்லை. அதுமாதிரி அரசினுடைய திட்டங்களை நிறைவேற்றுவதற்காக அந்த ஊராட்சிகளை இணைத்தால் அரசினுடைய நிலம் இருக்கும். அந்த இடத்திலே திட்டங்களை நிறைவேற்றலாம் என்கிற அந்த கணக்கிலேதான் அது எடுக்கப்பட்டது.

அதிலேகூட 751 ஊராட்சிகள் கேட்டு, அதில் 371 ஊராட்சிகள்தான் இணைப்பதற்கு சம்மதம் தந்தார்கள். எனவே, உறுப்பினர் சொன்னதுபோன்று அது முழு விவசாய பூமியாக இருந்தால் அதை அதிலிருந்து விலக்கிக் கொள்ளலாம் என்பதை உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். உரிய முறையிலே அதிகாரிகளிடம் சொல்லி முழுக்க முழுக்க விவசாய பூமியாக இருந்தால் அதை விலக்கிக் கொள்ளலாம். அதேநேரத்தில் உங்களுடைய பகுதியிலே ஏதாவது வளர்ச்சித் திட்டங்கள் வருகிறபோது உறுப்பினர்தான் எங்களுக்கு இடம் வாங்கித் தர வேண்டும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### அணைக்கட்டு தொகுதி –

# பீஞ்சமந்தை மலைப்பகுதிக்கு சிறுபேருந்துகள் வசதி!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் அறிவிப்பு!

சென்னை,ஏப்.18- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்த போக்குவரத்துத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் "அணைக்கட்டு தொகுதி - பீஞ்சமந்தை போன்ற மலைப்பகுதிகளுக்கு சிறு பேருந்துகள் வசதி செய்து தரப்படும்" என்று அறிவித்தார்.

கேள்விநேரத்தின் போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**ஏ.பி.நந்தகுமார்:** என்னுடைய அணைக்கட்டு தொகுதியானது 59 கிராம ஊராட்சிகளை கொண்ட ஒரு தொகுதி ஆகும். கிராமச் சாலைகள் குறுகிய சாலைகளாக இருக்கின்ற சாலைகளை, தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் அனைத்து சாலைகளையும் இன்றைக்கு தார்ச் சாலைகளாக உருவாக்கியிருக்கின்றார். அந்த சாலைகளில் MINI பேருந்து மட்டும்தான் செல்லமுடியும் என்கின்ற அந்த நிலையிலே, அமைச்சர் அவர்கள் MINI பேருந்து வசதிகளை செய்து தருவாரா?



**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** உறுப்பினருடைய தொகுதியான அணைக்கட்டு தொகுதி, எங்களுக்கெல்லாம் பரிட்சயமான தொகுதி. ஏற்கெனவே, அங்கு நாங்கள் தேர்தல் பணியாற்றியிருக்கிறோம். அவருடைய தொகுதியில் இருக்கிற பீஞ்சமந்தை போன்ற மலைப்பகுதிக்கு கூடுதல் பேருந்து வசதி வேண்டுமென்று ஏற்கெனவே அவரும் தெரிவித்திருக்கிறார். எனவே, புதிய பேருந்துகள் வந்து கொண்டிருக்கின்றன. அதிலே சிறு பேருந்துகள் வருகின்றபோது நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**உடுமலை கே. ராதாகிருஷ்ணன்:** பொள்ளாச்சியிலிருந்து கஞ்சம்பட்டி வழியாக நம்பியம்முத்தூர் செல்லும் பேருந்தின் எண் 49. அந்த பேருந்தை அருகிலிருக்கிற, 2 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள செட்டிப்பாளையத்திற்கு நீட்டித்துத் தர வேண்டும். அப்படி நீட்டித்துத் தரும்போது, அதிகளவு மாணவ, மாணவியர்கள் கஞ்சம்பட்டி மேல்நிலைப்பள்ளிக்குச் சென்று பயில்வதற்கு வசதியாக இருக்கும். அதை அமைச்சர் செய்து தருவாரா?

**அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர்:** அந்தப் பேருந்து புறநகர் பேருந்தாக இருந்தால், அவசியமாக கண்டிப்பாக நீட்டிப்பு செய்து தரப்படும். நகர பேருந்தாக இருந்தால், அந்த கிலோ மீட்டருக்குள் அடங்குகிறதா என்பதைப் பார்த்து, நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு பேரவையில் விவாதம் நடைபெற்றது.

### என்.எல்.சி. அங்கீகாரத் தேர்தல்,

# தொ.மு.ச. தனிச்சங்கமாக வெற்றி பெற்று, முதலமைச்சரிடம் சமர்ப்பிக்க வேண்டும்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் தலைமையுரை! சபா.இராசேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை!

கடலூர்,ஏப்.18- என்.எல்.சி,ரகசிய வாக்கெடுப்பு,அங்கீகாரத்தேர்தலில் தொ.மு.ச வை தனிச் சங்கமாக வெற்றிபெறச் செய்து முதலமைச்சரிடம் வெற்றிச்சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும் என ஆலோசனக்கூட்டத்தில் அமைச்சர் சி.வெ.கணேசன் தொழிலாளர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நெய்வேலி என்.எல்.சி ரகசிய வாக்கெடுப்பு, அங்கீகார தேர்தலில் தொ.மு.ச வை தனிச்சங்கமாக வெற்றி பெறச்செய்வதற்கான ஆலோசனைக் கூட்டம், தொ.மு.ச அலுவலகம் கலைஞர் அரங்கத்தில், 16.4.2025,புதன்கிழமை மாலை 6மணியளவில் நடைபெற்றது.

கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளரும், தொழிலாளர் நலன் திறன் மேம்பாட்டு துறை அமைச்ச ருமான சி.வெ. கணேசன் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா.இராஜேந்திரன் எம்.எல்.ஏ. முன்னிலை வகித்தார். என்.எல்.சி, தொ.மு.ச., பொதுச்செயலாளரும், பேரவை இணை பொதுச்செயலாளருமான என்.பாரி வரவேற்புரையாற்றினார். இக்கூட்டத்தில் அமைச் சர் சி.வெ.கணேசன் பேசுகையில் வருகின்ற ஏப்ரல் 25 ஆம் தேதி நடைபெற உள்ள என்.எல்.சி நிறுவனத்தின் ரகசிய வாக்கெடுப்பு அங்கீகாரத் தேர்தலில் தொ.மு.ச வில் 3,500 உறுப்பினர்கள் உள்ளனர்.

தனிப்பெரும்பான்மைக்கு தேவையான வாக்குகள் நம்மிடம் உள்ளது. தோழமைக்கட்சி தொழிற் சங்கங்களின், ஆயிரத்திற்கும் மேற்பட்ட வாக்குகளும் நம்மிடத்தில் உள்ளது.

எனவே நமது தொ.மு.ச உறுப்பினர்கள் அவரவர் வாக்குகளை செலுத்தினாலே நாம் எளிதில் தனிபெரும் சங்கமாக வெற்றி பெற முடியும். தொ.மு.ச, தனிச்சங்கமாக வெற்றி பெற்ற சான்றிதழை தமிழக முதல்வரிடம் சமர்ப்பித்து வாழ்த்து பெற வேண்டும் இவ்வாறு பேசினார். கூட்டத்தில் மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, நகரச் செயலாளர் வி.குருநாதன், என்.எல்.சி தொ.மு.ச தலைவர் பா.திருமா வளவன், பொருளாளர் இரா.ஐயப்பன், அலுவலக செயலாளர் ஆர்.ஜெரால்டு, தலைமை பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, முன்னாள் நகர செயலாளர் வி.பக்கிரிசாமி, முன்னாள் தொமுச தலைமை நிர்வாகிகள் ஆண்ட குருநாதன், சிவந்தான் செட்டி, வீரராமச்சந்திரன், கலியன், நன்மாற பாண்டியன், ஸ்ரீதர், தொ.மு.ச. துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள், செயற்குழு உறுப்பினர்கள், சி.பி.எப்., இயக்குனர்கள், பொதுக் குழு உறுப்பினர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

### ஓசூரிலிருந்து தேன்கனிக் கோட்டை வழியாக

# ஒகேனக்கல் செல்லும் சாலை நான்கு வழிச் சாலையாக்கப்படும்!

## சட்டப் பேரவையில் – அமைச்சர் எ.வ.வேலு அறிவிப்பு!

சென்னை, ஏப். 18- சட்டப் பேரவையில் கேள்வி நேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:-

**டி.இராமச்சந்திரன்:** என்னுடைய தளி தொகுதியில் ஓசூரிலிருந்து, தேன்கனிக் கோட்டை வழியாக ஒகேனக்கல் செல்கின்ற சாலை, இருவழிச்சாலை, மாநில நெடுஞ்சாலை. அந்த சாலை, கர்நாடக மற்றும் ஆந்திர எல்லைகளை இணைப்பதால், கடுமையான போக்குவரத்து நெரிசல் இருக்கிறது. அந்த இருவழிச்சாலையை நான்கு வழிச்சாலையாக மாற்றித் தர அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா?



**அமைச்சர் எ.வ. வேலு:** சட்டமன்ற உறுப்பினர் டி. இராமச்சந்திரன் கேட்டுக்கொண்டதற்கிணங்க, அந்தப் பகுதியில் பல சாலைகளை நான்கு வழிச் சாலைகளாக தரமுயர்த்திக் கொண்டிருக்கிறோம். ஏனென்றால், அப்பகுதியில் தொழிற்சாலைகள் அதிகமுள்ள காரணத்தால், ஒன்றன்பின் ஒன்றாக அங்கு இருவழிச் சாலைகள், நான்கு வழிச் சாலையாக தரமுயர்த்திக் கொண்டு வருகிறோம்.

இந்த ஆண்டுகூட, நான்கு வழிச் சாலைப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர் சொல்லுகின்ற சாலையை இந்த ஆண்டு எடுத்துக் கொள்ள முடியுமா என்று ஆய்வு செய்து, நிதிநிலைக்கேற்ப நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

### காஞ்சிபுரம் மாவட்டம் – உத்திரமேரூர் தொகுதியில்

# புதிதாக 3 துணை மின்நிலையங்கள் அமைக்கப்படும்!

## சட்டப்பேரவையில் – அமைச்சர் வி.செந்தில்பாலாஜி அறிவிப்பு!

சென்னை, ஏப்.18- சட்டப்பேரவையில் கேள்வி நேரத்தின்போது பதிலளித்த மின்துறை அமைச்சர் வி.செந்தில் பாலாஜி, "உத்திரமேரூர் தொகுதியில் மட்டும் புதிதாக மூன்று துணை மின் நிலையம் அமைப்பதற்கும் - ஒரு துணை மின் நிலையத்தை தரம் உயர்த்துவதற்கும் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது'' என்று குறிப்பிட்டார்.

கேள்விநேரத்தின்போது நடைபெற்ற விவாதம் வருமாறு:

**க.சுந்தர் :** உத்திரமேரூர் தொகுதி, குண்ணவாக்கம் ஊராட்சிப் பகுதியில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**அமைச்சர் செந்தில்பாலாஜி:** உத்திரமேரூர் தொகுதி, குண்ணவாக்கம் பகுதிக்கு, தற்போது நெல்வாய் 33/11 kV துணை மின் நிலை யத்திலிருந்து 11 kV குண்ண வாக்கம், மின்னாட்டி வழியாக சீரான மின் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. எனவே, குண்ணவாக்கம் பகுதியில் புதிய துணை மின் நிலையம் அமைக்க தற்போது அவசியம் எழவில்லை

**க. சுந்தர்:** அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல நெல்வாய் பகுதியிலிருந்து மின்சாரம் விநியோகம் செய்யப்படுவது உண்மைதான். குண்ணவாக்கம் என்பது உத்திரமேரூர் வட்டத்தில் ஒரு firca தலைநகரம். அதில் உள்ள ஒரு 13 கிராமங்களுக்கு, நெல்வாயில் இருக்கின்ற பிரிவு அலுவலகத்திலிருந்துதான் சேவைகள் பெறப்படுகின்றன. இப்பொழுது நெல்வாய் பகுதி செங்கல்பட்டு மாவட்டத்தில் சென்றுவிட்டது. ஆகவே, காஞ்சிபுரம் மாவட்டத்தில் உள்ள குண்ணவாக்கம் பகுதியில், பிரிவு அலுவலகத்தை அமைத்துத் தந்தால் போதுமானது. எனவே, குண்ணவாக்கம் பகுதியில் பிரிவு அலுவலகம் அமைக்கப்படுமா?

**அமைச்சர் வி.செந்தில்பாலாஜி:** குண்ணவாக்கம் பகுதியில் புதிய பிரிவு அலுவலகம் வேண்டுமென்று உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார். துறை அதிகாரிகளிடத்தில் கேட்டு, அங்கிருக்கக்கூடிய மின் இணைப்பு களின் எண்ணிக்கையின் அடிப்படையில் முன்னு ரிமை வழங்கப்படும் .

**க. சுந்தர்:** உத்திரமேரூர் தொகுதியைச் சேர்ந்த காஞ்சிபுரம் மாநகராட்சிக் குட்பட்ட ஓரிக்கை பகுதியில் ஒரு 110/33 11 kV துணை மின் நிலையம் செயல்பட்டு வருகிறது. அங்கு புதிதாக ஒரு 25 MVA power transformer அமைத்தால், அந்தப் பகுதியில் கூடுதலாக அய்யம் பேட்டை, குருவிமலை போன்ற துணை மின் நிலையங்கள் சிறப்பாகச் செயல்பட ஏதுவாக இருக்கும். அதே நேரத்தில், ஓரிக்கைக்கு அருகில் உள்ள அய்யங்கார்குளம் பகுதி திருவண்ணாமலை மாவட்டத்தையொட்டியுள்ள ஒரு பகுதியாக உள்ள காரணத்தினால், அங்கு சில நேரங்களில் சரியாக மின் விநியோகம் கிடைக்காமல், குறைந்த மின்னழுத்தம் ஏற்படுகிறது. அங்கு ஏற்கெனவே, அப்துல்லாபுரம், அதுவும் திருவண்ணாமலை மாவட்டம். அந்தப் பகுதியில் ஒரு line tap SS இருக்கின்றது. செயல்படக்கூடிய வகையில் அதனையும் மாற்றி, ஓரிக்கையில் power transformer அமைத்தால், அந்தப் பகுதியில் சீரான மின் விநியோகம் சரியாக இருக்கும் அமைச்சர் அவர்கள் அவற்றைச் சரிசெய்து தருவார்களா?



**அமைச்சர் வி. செந்தில்பாலாஜி:** காஞ்சிபுரம் மாவட்டத்தில் சீரான மின் விநியோகம் செய்வதற்காக முதலமைச்சர் அவர்கள் 7 புதிய துணை மின் நிலையங்கள் அமைப்பதற்கும், ஒரு துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்துவதற்கும் அனுமதி வழங்கியிருக்கின்றார்கள். அந்த வகையில், உத்திரமேரூர் தொகுதியில் மட்டும் 3 புதிய துணை மின் நிலையங்கள், ஒரு துணை மின் நிலையத்தைத் தரமுயர்த்துவதற்காக நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது. உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ள, ஓரிக்கை துணை மின் நிலையத்தில் இருக்கக்கூடிய 110/33 kV கூடுதலாக ஒரு 25 mva power transformer வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கின்றார்.

அதற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. விரைவில் அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் .

இவ்வாறு விவாதம் நடைபெற்றது.

# செங்கம் நகராட்சியில் குண்டும் குழியுமான சாலைகளைச் செப்பனிடுக!

## சட்டப் பேரவையில் – கழக உறுப்பினர் மு.பெ.கிரி கோரிக்கை!

**சென்னை, ஏப். 18– சட்டப்பேரவையில் செங்கம் தொகுதி கழக உறுப்பினர் மு.பெ.கிரி எழுப்பிய கேள்வியும் அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதிலும் வருமாறு:**

**மு.பெ. கிரி:** செங்கம் நகராட்சியாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, பேரூராட்சியாக இருக்கும்போது பல சாலைகள் 90 சதவிகிதத்திற்கும்மேல் குண்டும், குழியுமாக இருந்தன. இந்த ஆண்டு அந்தச் சாலைகளையும், கால்வாய்களையும் அமைத்துத் தர அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**கே.என். நேரு:** ஏற்கெனவே நம்முடைய உறுப்பினர் அவர்கள் இதே கேள்வியை கேட்டார்கள். எனவே, இந்த ஆண்டு முதலமைச்சர் அவர்கள், நகராட்சி, பேரூராட்சி மற்றும் மாநகராட்சி பகுதிகளிலே சாலைகளை சரிசெய்வதற்காக 3,780 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி தந்திருக்கிறார்கள். எனவே, செங்கம் நகராட்சியைப் பொருத்தளவு நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சரும் அந்தப் பகுதியைப் பார்க்க வேண்டும். அதேபோன்று, பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் திருவண்ணாமலை குடிநீர் திட்டத்தை பற்றியும் பேசியிருக்கிறார். எனவே, செங்கம் நகராட்சியைப் பற்றி பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களும் சொல்லியிருக்கிறார். உறுப்பினர் கோரியது போல், அங்கே எந்தெந்த சாலை பிரதான சாலை இருக்குமானால் நிச்சயமாக அதை எடுத்து, உடனடியாக செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



இவ்வாறு அமைச்சர் பதிலளித்தார்.



சென்னை மேற்கு மாவட்டம், அண்ணாநகர் தெற்கு பகுதி மாணவர் அணி ஆலோசனைக்கூட்டம் அண்ணாநகர் தெற்கு பகுதி செயலாளர் ந.இராமலிங்கம் எம்.சி. தலைமையில் அவரது இல்லத்தில் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் துபாய் வி.ஆர்.விஜய் மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் எம்.எம்.டி.ஏ கார்த்திக் முன்னிலையில் நடைபெற்றது. பகுதி மாணவர் அணி அமைப்பாளர் ஜி.எம்.ஸ்ரீதரன் மற்றும் பகுதி துணை மைப்பாளர்களிடம் இல்லந்தோறும் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை எனும் தலைப்பில் மாணவர் அணி உறுப்பினர் சேர்க்கை படிவம் வழங்கி ஆலோசிக்கப்பட்டது.